**குளச்சல் நகராட்சி**

குளச்சல் நகர்மன்றத்தின் மே 2017–ம் மாத அவசரக் கூட்டம் 02.05.2017 முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்றது.

**பொருள் எண்: 1**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 28.09.2016 அன்று சட்டப்பேரவையில் விதி எண்.110–ன் கீழ் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள தெருவிளக்குகளை எல்.இ.டி விளக்குகளாக மாற்றம் செய்யும் பணியினை ரூ.320.00 கோடி (ரூ முந்நூற்றி இருபது கோடி) மதிப்பீட்டில் பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் (Public Private Partnership Mode) மேற்கொள்ளவும் அதன் மூலம் 35% சதவீத மின்கட்டண செலவினம் குறைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன் பேரில் திண்டுக்கல் மாநகராட்சி மற்றும் திருநெல்வேலி மண்டலத்தில் குளச்சல் நகராட்சியினை உள்ளடக்கியும் மற்றும் இதர மண்டலத்தில் உள்ள 90 நகராட்சிகளில் எரிசக்தி சேமிப்பு நடவடிக்கையில் ஏற்கனவே உள்ள தெருவிளக்குகளை எல்.இ.டி விளக்குகளாக மாற்றவும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA-IV ) துறை அரசாணை எண்.39 நாள்.21.04.2017–ன் படி வழஙகப்பட்ட நிர்வாக அனுமதி மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அதன் பேரில் இந்நகராட்சி பகுதியிலுள்ள 1580 தெரு விளக்குகளை எல்.இ.டி விளக்குகளாக மாற்றும் பணியினை தகுதி வாய்ந்த எரிசக்தி சேமிப்பு நிறுவனஙகளின் 100 % சதவீத பஙகளிப்புடன் கட்டுமானம்–இயக்குதல்–மாற்றம் முறையில் (Built Operate transfer Mode ) மேற்கொள்ளவும் அதற்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்வதற்கு மதிப்பீட்டுத் தொகையில் 2% சதவீத செலவினத்தை தகுதி வாய்ந்த Independent Investment Grade Auditing Agency –க்கு வருவாய் நிதியிலிருந்து வழஙகவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.763/2017/இ2

**தீர்மானம் எண்.1651, அனுமதிக்கப்பட்டது.**

## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகர்மன்றத்தின் மே 2017–ம் மாத அவசரக் கூட்டம் 05.05.2017 முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்றது. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானஙகள் பின்வருமாறு,

### பொருள் எண்.1

குளச்சல் நகராட்சியில் செயல்பட்டு வரும் பல்வேறு அடிப்படை சேவைகளில் ஒன்றான தெருவிளக்குகளை இயக்கி பராமரித்தல் காரணமாக மின்பயனீட்டு செலனிம் மொத்த நிர்வாக செலவினத்தில் கணிசமான அளவில் உள்ளது. இதனை தருத்திற்கொண்டு மின் பயன்பாட்டினை குறைக்கும் விதமாகவும் அதன் செலவினஙகளை குறைக்கும் விதமாகவும் நகராட்சியிலுள்ள அனைத்து தெரு விளக்குகளையும், குறைந்த மின்சாரம் கொண்டு செயல்படக்கூடிய ஒளிர் உமிழ் விளக்குகளாக (LED) மாற்றி அமைத்திட முடிவு செய்யப்பட்டது. ஆதற்கான அறிவிப்பினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் கடந்த 29.08.2016 அன்று விதி எண்.110–ன் கீழ் சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்டு, அதன் தொடர்ச்சியாக அரசாணை எண்.39, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை, நாள்.29.04.2017–ல் நிர்வாக அனுமதி வழஙகி உத்திரவிடப்பட்டு வரப்பெற்ற அரசாணை மன்றத்தின் மேலான தகவலுக்கும் பதிலிற்கும் வைக்கப்படுகிறது.

இந்த அரசாணையின்படி இந்நகராட்சியிலுள்ள அனைத்து வகையான தெருவிளக்குகளையும் குறைந்த மின்சாரத்தில் செயல்படக்கூடிய ஒளிர் உமிழ் விளக்குகளாக (LED lights) மாற்றி அமைக்கவும் இதற்குரிய செலவினத்தை 100 % தனியார் முதலீட்டுடன் அமைத்து அவர்கள் மூலமாகவே இயக்கி பராமரித்திடவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்தவகையில் தெருவிளக்குகளை திறம்பட ஒளிர் உமிழ் விளக்குகளாக உரிய மின்சேமிப்பு சாதனஙகளைக் கொண்டு அமைத்திட கீழ்க்கண்ட வழிமுறைகளை கடைப்பிடித்திடவும் அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1. நகராட்சியில் தற்போதுள்ள தெருவிளக்கு கட்டமைப்புகளை உரிய முறையில் ஆய்வு செய்து தற்போதைய தன்மை அறிந்து அதற்கேற்ப மாற்றி அமைத்திட வேண்டிய ஒளிர் உமிழ் விளக்குகளின் தன்மையை நிர்ணயித்து அவற்றிற்கு ஆகும் செலவினை கணக்கிட்டு செலவுத்தொகையை மீளப்பெறும் திட்டக்காலத்தை கணக்கிட்டு உரிய திட்ட வரைவுகளை தயாரித்து வழஙகிட ''மின் சேமிப்பு கணக்கீட்டு முகவர்களை'' நியமித்தல்.
2. மின் சேமிப்பு கணக்கீட்டு முகவர்களால் தயாரித்து அளிக்கப்பட்டு, நகராட்சி நிர்வாக ஆணையரக மற்றும் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநரக தொழில்நுட்ப குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் திட்ட வரைவின் அடிப்படையில் தகுதியான மின்சேமிப்பு நிறுவனத்தின் மூலம் திட்டத்தினை செயல்படுத்த வேண்டி தகுதியான மின்சேமிப்பு நிறுவனஙகளை தேர்ந்தெடுத்து பட்டியலபடுத்துவதற்கான நடைமுறைகளை கடைப்பிடித்தல்.
3. மின்சேமிப்பு கணக்கீட்டு நிறுவனத்தால் தயாரிக்கப்படும் திட்ட வரைவின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி வரைவு தயார் செய்து அவற்றினை பட்டியலபடுத்தி தகுதியான மின்சேமிப்பு நிறுவனஙகளிடம் வழஙகி ஒப்பந்தப்புள்ளி கோரி உரிய மின்சேமிப்பு நிறுவனத்தாரை / முதலீட்டாளரை / தெருவிளக்குகளை

அமைத்து பராமரிப்பவரை தேர்வு செய்து ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொண்டு பராமரிக்கவும், இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததாரர் தெருவிளக்கு கட்டமைப்புகளை ஒளிர்உமிழ் விளக்குகளுடன் இயக்கி பராமரிப்பதின் மூலம் ஏற்படுகின்ற மின்சேமிப்பு, அதன் பொருட்டு எதிர்பார்க்கப்படும் மின்கட்டண சேமிப்பு (அடிப்படையாண்டின் மின் கட்டண தொகையினை கொண்டு கணக்கீட வேண்டும்) சம்மந்தப்பட்ட முதலீட்டாளருக்கு திட்டக் காலம் முழுவதும் வழஙகப்படும். இந்த அரசாணையின்படி மேற்குறிய பத்தி (1)ல் குறிப்பிட்டவாறு மின்சேமிப்பு கணக்கீட்டு முகவர்களை நியமித்து திட்ட வரைவு தயாரிப்பதற்கான செலவினத் தொகையை திட்ட மதிப்பீட்டில் 2 % மிகாமல் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடுவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேலும் பத்தி (1)ல் குறிப்பிட்டவாறு மின்சேமிப்பு கணக்கீட்டு முகவர்களை (Investment Grade Audit Agency) நியமித்தடவும் பத்தி (2)ல் குறிப்பிட்டுள்ளவாறு தகுதியான மின்சேமிப்பு நிறுவனங்களை கண்டறிந்து பட்டியலிடவும் அவ்வாறு பட்டியிலிடப்பட்டவருக்கு மேற்படி நகராட்சி தெருவிளக்கு கட்டமைப்புகளில் உரிய மின் சேமிப்பு சாதனத்தினை பொருத்து ஒளிர்மின் விளக்குகளை அமைத்து இயக்கி பராமரித்திட ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும், இறுதி வடிவாக்கம் செய்து தகுதியான 100% முதலீடு செய்ய கூடிய மின்சேமிப்பு நிறுவனஙகளுடன் ஒப்பந்தம் ஏற்படுத்தும் வரை தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர்/ மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு அஙகீகாரம் அளித்திடவும் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. ந.க.எண்.763/2017/இ2

**தீர்மானம் எண்.1652, அனுமதிக்கப்பட்டது.**
**பொருள் எண்.2**

இந்நகராட்சி பொறியியல் பிரிவில் குடிநீர் வினியோகப் பணிகளுக்கு தேவையான 4 பணியாளர்களை 2017–18–ம் ஆண்டிற்கு (மே 2017 முதல் ஏப்ரல் 2018 வரை) பணிக்கு அமர்த்துவதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.4.40 இலட்சத்திற்கு தீர்மானம் எண்: 1629 நாள்: 30.03.2017 –ன் மூலம் மன்ற அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 05.05.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.சந்திரசேகர்,<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டு விகிதம் |
| 2. | திரு.S.வரதராசன்,<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டைவிட<br>3.03 % அதிகம் |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.C.சந்திரசேகர்,ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு விகிதத்தில் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழஙக மன்ற அஙகீகாரம் வேண்டப்படுகிறது.

ந.க.எண்.இ2/2691/2014

**தீர்மானம் எண்.1653 அனுமதிக்கப்பட்டது.**

ஆணையாளர்
குளச்சல் நகராட்சி

## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2016 மே (26.05.2017) வெள்ளிக்கிழமை பிற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது . கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானஙகள் பின்வருமாறு,

### பொருள் எண்.1

இந்நகராட்சியில் குடிநீர் நீரேற்றும் நிலையஙகளில் நிறுவப்பட்டுள்ள 200KVA, 62.50KVA, 50 KVA மற்றும் 30KVA ஜெனரேட்டர்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்வதற்கு 2017–18–ம் வருட பராமரிப்பு (AMC) பணிகள் மேற்கொள்வதற்கு ரூ.1,50,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.கு:** மன்றம் அனுமதி வழஙகலாம்

ந.க.எண்.567/2017/இ2

**தீர்மானம் எண்.1654 அனுமதிக்கப்பட்டது.**

### பொருள் எண்.2

இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் வணிக வளாகத்தில், மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி 2014–15–ன் கீழ் கட்டப்பட்டுள்ள நவீன மீன் சந்தையில், கூடுதல் மின் விளக்கு வசதி மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.5,0000/–க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும், இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்: 1650 நாள்: 28.04.2017–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 12.05.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின் வருமாறு,

| | | |
|---|---|---|
| 1 | திரு.M.வற்கீஸ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.02% குறைவு |
| 2 | திரு.V.ராஜ பிரவின் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.80% அதிகம் |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில், திரு. M.வற்கீஸ், ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.02% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:** மன்றம் அனுமதி வழஙகலாம்

ந.க.எண்.749–1/2017/இ1

**தீர்மானம் எண்.1655 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

இந்நகராட்சிக்குட்பட்ட பள்ளிரோடு சாலை மிகவும் மோசமாக சேதமடைந்து குண்டும், குழியுமாக காணப்படுவதால், போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் மிகுந்த சிரமம் ஏற்பட்டுள்ளது. எனவே பொது நலனை கருத்தில் கொண்டு, மேற்படி பள்ளிரோடு தார்சாலை ஒட்டுப் பணிகள் ( Bitumen Patchwork ) மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.5,00,000/–க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :** பணியின் அவசர அவசியம் மற்றும் பொது நலன் கருதி, மன்றம் அனுமதி வழஙகலாம்.

ந.க.எண்.898/2017/இ1

**தீர்மானம் எண்.1656 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

இந்நகராட்சிக்கு சொந்தமான உப்பளம் பகுதி உரக்கிடஙகில் கடந்த 19.02.2017 அன்று தீ விபத்து ஏற்பட்டதை தொடர்ந்து நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக உப்பளம் பகுதி உரக்கிடஙகு கல்குளம் வட்டாட்சியரால் பூட்டப்பட்டது. இதனால் நகராட்சி பகுதிகளில் தினசரி சேகரமாகும் குப்பைகளை அப்புறப்படுத்த முடியாமல் தேஙகியதால், தொற்று நோய் பரவும் அபாயம் ஏற்பட்டதை கண்டித்து, குப்பைகளை உடனடியாக அகற்றக் கோரி, 16.03.2017 அன்று வியாபாரிகள் சஙகம் மற்றும் பொதுநல அமைப்புகள் காலவரையற்ற உண்ணாவிரதம் மேற்கொண்ட நிலையில், மேற்படி போராட்டக்காரர்களுடன் நடத்தப்பட்ட சமரச பேச்சு வார்த்தையில், போர்கால அடிப்படையில் குப்பைகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என வாக்குறுதி அளிக்கப்பட்டு, உண்ணாவிரத போராட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டதை தொடர்ந்து, நகராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் தேஙகிக் கிடந்த சுமார் 100 டன் குப்பைகளை அகற்றும் பணியினை தனியார் மூலம் ரூ.72,900/– செலவினத்தில், நகராட்சி சட்ட விதி 15–ன் கீழ், மேற்கொண்டுள்ள விவரம் மன்றத்தின் தகவலுக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு:** மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்.557/2017/எச்1

**தீர்மானம் எண்.1657 அனுமதிக்கப்பட்டது.**